இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்**
ISSN: 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)
பகுதி V, பதிப்பு 13 - ஏப்ரல் 2018
UGC Approved Journal (64089), © Author

# சங்க இலக்கியத்தில் விளித்தல் உத்தி

**கு.வளர்மதி**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி

## முன்னுரை

*செய்திப்பரிமாற்றத்தின் வெற்றி, செய்தியை அறிவிக்கும் முறையில் அமைகிறது. ஒருவர் கூறவந்த செய்தியை பெறுநர்க்கு அறிவிக்கும் பேச்சுமுறை, 'உத்தி' எனப்படும். செய்தியின் மையக்கருத்து, செய்தி அமைப்பு, செய்தி சொல்லப்படும் முறை மூன்றும் செய்தியினால் நிகழும் விளைவுகளைத் தீர்மானிக்கின்றன. "ஒரு செய்தி பெறுநரின் உணர்வுகளைத் தூண்டி அவரைச் செயல்படச் செய்யும் போது திறம்படச் சொல்லப்பட்ட செய்தியாகக் கருதப்படுகின்றது." சங்கஇலக்கியத்தில் குறிப்பாக எட்டுத்தொகையில் செய்தியைக் கூறுவதற்கு 'விளித்துப் பேசுதல்' ஒரு உத்தியாகக் கையாளப்பட்டுள்ளது. அதைப் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.*

**உத்தி - சொல் விளக்கம்**

உத்தி என்பது வடமொழிச் சொல்லாகும். தொல்காப்பியத்தில் 'உத்தி' குறித்த நூற்பா உரையில் இளம்பூரணர், அதனை

"உத்தி என்பது வடமொழிச் சிதைவு"1 எனக் குறிப்பிடுகிறார்.'யுக்தி' என்பதன் சிதைவாக 'உத்தி' என்னும் சொல்லைத் தொல்காப்பியர் தமிழில் ஆண்டுள்ளார் என இளம்பூரணர் கருதியுள்ளார். தமிழ் இலக்கண மரபுப்படி யகர உகரமான 'யு' என்னும் எழுத்துத் தமிழில் மொழிமுதல் வராது.

"ஆவொடு அல்லது யகரம் முதலாது" 2

என்பது தொல்காப்பிய நூற்பா. அதேபோல் ககர மெய்யை அடுத்து அதன் உயிர்மெய் எழுத்தே இடம்பெறும். இதனை 'உடனிலை மெய்ம் மயக்கம்' என்பர். அதாவது, ககர மெய், தன்மெய்யோடு மட்டுமே வரும். அதனால் 'யுக்தி' என்னும் சொல் 'யுத்தி' என்றாகிப் பின்னர் 'உத்தி' எனச் சிதைந்து தமிழில் வழங்கியதாக இளம்பூரணர் கொண்டார். நச்சினார்க்கினியரும் இளம்பூரணர் கருத்தினரே.

"சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்."3

என்னும் நூற்பா உரையில்,

"இனி, தந்திரம், சூத்திரம், விருத்தி, அருத்தாபத்தி, உத்தி என்றாற் போல்வன நூலுள் சிதைந்து வந்தன."4

என, சிதைந்து வரும் சொற்களுக்கு சான்றுகள் தரும்பொழுது உத்தியைக் குறிப்பிடுகிறார். உத்தி என்பது சிதைந்து வந்த சொல் என்பதனால், அது 'யுத்தி' என்பதிலிருந்து வந்ததாக அவர் கருதுவதை அறியமுடிகிறது.

"உத்தி என்பது இலக்கண நூல்களில் காணப்படும் கூறாகும். நூலிலக்கணம் ஐந்தனுள் ஒன்றாக இதனைத் தொல்காப்பியர் குறித்துள்ளார். இச்சொல் வடசொல்லின் சிதைவாகும்."5 என இளம்பூரணரை வழிமொழிகிறது.

எதிர்நிலையில் உத்தி என்பது தமிழ்ச்சொல் என அறிஞர்கள் சிலர் பருதுகின்றனர். செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி, 'உந்து' என்னும்

வேர்ச்சொல்லிலிருந்து உத்தி என்பது வந்தது என்பதை, "உ – உந்து = சேர்த்துக் கட்டு, பொருந்து. மாடுகளைச் சேர்த்துக் கட்டும் கயிறு உத்தாணி எனப்படுதல் நோக்குக. புணர்ப்பு, பொருத்தம், பொருத்தமானதை அறியும் அகக்காரணம். நூற்கும் உரைக்கும் பொருந்தும் நெறிமுறை 'உத்தி'. இதில் 'உத்' என்னும் செயற்கையடியை வடமொழியார் 'யுத்' என்று திரிப்பர்" எனக் காட்டுகிறது.

**விளித்துப் பேசுதல்**

ஒருவரை விளித்துப் பேசுவதால் செய்திப்பரிமாற்றம் தொய்வின்றி நிகழ்கின்றது. பேசுவோருக்கும் கேட்போருக்கும் இடையில் நெருக்கம் ஏற்படுகின்றது. கேட்போரை வசப்படுத்தவும், தன்பால் ஈர்க்கவும் இம்முறை பயன்படுகின்றது. சங்க இலக்கியத்தில் தோழி > தலைவி, தோழி > தலைவன், தோழி > செவிலி; தலைவி > தோழி, தலைவி > தலைவன், தலைவி > புதல்வன் ; தலைவன் > தலைவி, தலைவன் > பாணன், தலைவன் > பாகன் போன்றவர்கள் விளித்துப் பேசுவதைக் காணமுடிகிறது.

**தோழி > தலைவி**

தலைவியிடம் செய்தியைக் கூற விழையும் தோழி, தலைவியை விளித்துப் பேசுகின்றாள். தோழியின் விளியில் 'தலைவியின் அழகு, தலைவியின் எதிர்பார்ப்பு, அறிவுரை, உடன்பாட்டுநிலை' ஆகியவை இடம்பெறுகின்றன.

தலைவியைப் பாராட்டும் போதும், தலைவனது குறைநயக்கும் போதும், தலைவியின் உள்ளம் விழையுமாறு தலைவியின் அழகு வெளிப்படும் வண்ணம் தோழி விளித்துப் பேசுகின்றாள்.

"அஞ்சில் ஓதி ஆயிழை"7
"நறுநுதல்"8
"நீலிதழ் உண் கண்ணோய்"9
"ஆய்நுதல் அனிகூந்தல் அம்பணைத் தடமென்றோள்
தேனாறு கதுப்பினாய்"10
"மாமழை மடமான் பிணையியல் வென்றாய்
முத்தின் தகை யேய்க்கும் முறுவலாய்"11

என்பன தலைவியின் அழகுநலன் உணர்த்தும் தோழியின் விளிகள்.

துன்பநிலையிலிருக்கும் தலைவியின் உள்ளம் விரும்பும் சொல்லை விளிக்கு முன்னும் பின்னும் கூறித் தலைவியைத் தேற்றுகின்றாள், தோழி. தலைவன் வருகையை எதிர்நோக்கியிருக்கும் தலைவியை,

"இனையல் - வாழி, தோழி! புணர்வர்"12
"வருவர் வாழி தோழி! பலபுரி"13
"வருவர் வாழி தோழி பெரியர்"14
"நோய்மலி நெஞ்சமொடு இனையல், தோழி"15
"துறந்துஉள்ளார் அவர், எனத் துனிகொள்ளல் எல்லாநீ"16

என்றெல்லாம் கூறி விளிக்கின்றாள். தலைவிக்கு ஆறுதல் தரக்கூடிய சொற்களைக் கூறி விளிப்பதால், தலைவியின் உள்ளம் மகிழ்ந்து, தோழி பேசுவதைத் தொடர்ந்து கேட்கின்றாள்.

தம் கருத்தை வலியுறுத்த நினைக்கும் தோழி, விளிச்சொல்லுடன் அதனையும் இணைத்துக் கூறுகின்றாள். தலைவனுக்கு நீ இரங்காவிடில் அவன் இறந்துபடுவான். அதனால் நமக்குப் பெருந்துன்பம் பயக்கும். எனவே என் வேண்டுகோளுக்கு இணங்குதி என்று காரணம் காட்டி

"ஒல்இனி வாழி, தோழி – கல்லென"17

என அழைக்கின்றாள்.

தலைவனது விருப்பத்திற்குத் தலைவி உடன்படும் நிலையை உணர்தற்பொருட்டு,

"அம்ம தோழி கூறுமதி நீயே" 18

என விளிக்கின்றாள். இவ்விளியில் தலைவியின் உள்ளக்கருத்தை அறிந்து கொள்ளும் தோழியின் ஆர்வம் புலப்படுகின்றது.

இவ்வாறு,'தலைவியைப் பாராட்டுவதற்கும், ஆற்றுவதற்கும், தம் கருத்தை ஏற்கச் செய்வதற்கும், தலைவியின் இசைவைப் பெறுவதற்கும்' ஏற்றவகையில் தோழியின் பேச்சில் விளிநிலைகள் உத்திகளாக அமைகின்றன.

**தோழி > தலைவன்**

தலைவனது பெருமையையும், வீரத்தையும், நிலத்தையும் வெளிப்படுத்தும் முறையில் தலைவனை விளித்துப்பேசுகின்றாள், தோழி.

"தாராய் மார்ப"19 "பெரும"20
"நெடுந் தகாய்"21 "உரனுடைய உள்ளத்தாய்"22
"விறல் வெற்ப"23 "அணிமலை நாட"24
"வயலணி நல்லூர"25 "வயமான் செல்வ"26
"தண் சேர்ப்ப"27

போன்றவை தோழி, தலைவனைப் பாராட்டும் நிலையில் விளித்துப் பேசும் பாங்காகும்.

தலைவியின் அழகு குலைவதற்குக் காரணமானவனாகத் தலைவன் மாறும்போது அவனை இகழ்ந்து,

"மகனல்லை மன்றவினி
செல்லினி வினவல்"28

என சினந்து கூறி விரட்டுவதையும் தோழியின் விளியால் அறியமுடிகிறது.

இவ்வாறு, 'தலைவனைப் பாராட்டுவதாகவும்,தலைவனை இகழ்வதாகவும்' தோழியின் பேச்சில் விளிநிலைகள் உத்திகளாக அமைகின்றன.

**தோழி > செவிலி**

செவிலியின் கவனத்தைத் தம்பால் ஈர்க்கும் வகையிலும், தலைவனுக்குச் செய்தியைக் கூறும் நிலையிலும் தோழி செவிலியை அழைக்கும் விளிநிலைகள் அமைகின்றன.

இரவுக்குறிக்கு இடையூறாகச் செவிலி இருப்பாளோ? என்று அஞ்சிய தோழி, செவிலியின் உறக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு மூன்று முறை விளித்துப் பேசுகின்றாள்.

"அன்னாய் வாழி வேண்டன்னை
கேட்டியோ? வாழி வேண்டன்னை
பின்னும் கேட்டியோ"29

அச்சத்தின் காரணமாக இப்பாடலில் அடுக்குவிளிகள் அமைகின்றன.

தலைவன் சிறைப்புறமிருக்கும் போது, செவிலியை

"அலையவ் வாழி வேண்டன்னை"30

எனத் தோழி விளிக்கின்றாள். இதனால் தலைவியைச் செவிலி அலைக்கும் கொடுமையைத் தலைவனுக்கு உணர்த்துகின்றாள்.

இவ்வாறு தோழி, செவிலியை விளிக்கும் விளிநிலைகள் செவிலியைத் தம்பால் ஈர்க்கவும், தலைமகனுக்குச் செய்தி கூறவும் பயன்படும் செய்திப்பரிமாற்ற உத்திகளாகும்.

**தலைவி > தோழி**

தலைவியின் அகஒழுக்கத்திற்குத் தோழி தக்க துணையாவதால் தோழியைத் தலைவி விளிப்பன, பாராட்டு நிலையிலேயே அமைந்துள்ளன.

"அம்ம வாழி தோழி"31 "காதலந்தோழி"32 "புனையிழாய் ஒளியிழாய்"33 "சின்மொழி, வடுநீங்கு கிளவியாய்"34 "வயங்கிழை"35 "சுடரிழாய்"36 "நற்றோழி"37

போன்ற தோழியின் விளிநிலைகள் தோழியை அழைத்துப் பேசுவதற்குப் பயன்படும் செய்திப்பரிமாற்ற உத்திகளாக அமைகின்றன.

**தலைவி > தலைவன்**

தலைவனைத் தலைவி,'ஊடல், உரிமை, இகழ்ச்சி, அன்பு' நிலைகளில் விளித்துப் பேசுவதைக் காணமுடிகிறது.

"ஏடா"38 "யாரிவன்? ஏஎ"39
"பரத்தை வியன் மார்ப"40

என்பன ஊடல் நிலையிலும்,

"ஏந்தெழில் மார்ப"41

என்பது உரிமை நிலையிலும்

"விடலை நீ"42 "சேகா"43

என்பன இகழ்ச்சி நிலையிலும்

"புனலணி நல்லூர"44

என்பது அன்புநிலையிலும் விளிஉத்திகளாகின்றன.

**தலைவி > புதல்வன்**

தலைவிக்கு கற்புநிலையில் மனமகிழ்ச்சியைத் தருபவன் புதல்வன். தலைவனின் பரத்தமைத்தன்மை தலைவியின் மனதில் ஏற்படுத்தும் துயரை ஆற்றுகின்ற மருந்தாக விளக்குபவன் புதல்வன். அவனை விளிக்கும் தலைவியின் மொழிகள் அன்பும் கனிவும் மிக்கவை.

"செம்மால்"45 "வந்தீக ஈங்கு"46

என்று அன்பு மிகுந்து அழைக்கும் தலைவி, பரத்தையர் மனையில் அவர்களால் ஒப்பனை பெற்று வந்த புதல்வனைக் கண்டவுடன் "சிறுபட்டி"47 என்று சினக்கின்றாள்.

**தலைவன் > தலைவி**

தலைவன், தலைவியை விளிக்கும் விளிகளில்,'தலைவியின் அழகும், மென்மையும்' வெளிப்படுகின்றன.

"அம்மா அரிவை"48 "மடந்தை"49
"நேரிழை"50 "புனையிழை"51

"மெல்லியள் குறுமகள்"52 "கிளிபுரை கிளவியாய்"53 "உறுநீர் அமிழ்தேய்க்கும் எயிற்றோய்"54 "புனைவளர் பூங்கொடி அன்னாய்"55

போன்றவை தலைவன், தலைவியை விளிக்கும் விளிநிலை உத்திகளாகும்.

**தலைவன் > பாணன்**

தலைவனின் பொழுதுபோக்கிற்கு உதவுபவன் பாணன். அதனால், அவனைத் தலைவன்

"வாராய் பாண நகுகம்"56

என நட்புணர்வோடு விளிக்கின்றான்.

**தலைவன் > பாகன்**

வினைமுற்றிய தலைவன், விரைந்து தலைவியைக் காணவேண்டும் என்ற வேட்கையால், தேர்ப்பாகனது வினைவன்மையைக் கூறி விளிக்கின்றான்.

"கடவுமதிபாக"57 "ஊர்மதி வலவ"58 "ஏமதி வலவ"59 "மதியுடை வலவ"60 "கையுடை வலவ"61

போன்றவை பாகனை விளிக்கும் விளிநிலைகளாகும்.

பேசும் மாந்தர், கேட்போரை விளிக்கும் விளிநிலையிலிருந்தே அவரது பேசும் திறனை உணரமுடியும். கேட்போரின் ஆவலைத் தூண்டித் தம் பேச்சைக் கேட்குமாறு செய்வதற்கு 'விளிநிலைகள்' உத்திகளாகப் பயன்படுகின்றன. பேசுவோரின் மனஆர்வம், கேட்போரிடம் பொருந்த இவ்வுத்தி பெருந்துணையாகின்றது.

**புறப்பாடல்களில் விளித்தொடர்**

புறப்பாடல்களிலும் செய்தியைக் கூறுவதற்கு முன்னால், பேசுவோர் கேட்போரை விளிப்பதைக் காணமுடிகிறது.

பாண்டியன் கருங்கை ஒள்வாட் பெரும்பெயர் வழுதியிடம் பேசுகின்ற இரும்பிடர்த்தலையார்,

"தவிராஈகைக் கவுரியர் மருக"62

என்றும்,

"செயிர்நீர் கற்பிற் சேயிழை கணவ"63

என்றும்,

"விலங்ககன்ற வியன் மார்ப"64

என்றும் மூன்றுமுறை விளித்து, அதன் பின்னரே மன்னனிடம் செய்தியைக் கூறுகின்றார்.

இங்ஙனம், விளிச்சொற்களும், விளித்தொடர்களும் கேட்போரைத் தம்பால் ஈர்த்துச் செய்தியைக் கேட்கச் செய்யும் சிறந்த பரிமாற்ற உத்திகளாக அமைகின்றன.

**தொகுப்புரை**

செய்திப்பரிமாற்றத்தின் வெற்றி செய்தியை அறிவிக்கும் முறையில் அமைகின்றது. சங்க இலக்கியத்தில் செய்தியைச் சொல்வதற்குச் செய்திப் பரிமாற்ற உத்திகள் கையாளப்பட்டுள்ளன. விளிச்சொற்களும் விளித் தொடர்களும் கேட்போரைத் தம்பால் ஈர்த்துச் செய்தியைக் கேட்கச் செய்யும் செய்திப்பரிமாற்ற உத்தியாக அமைகின்றன. தலைவி, தோழி, தலைவன் ஆகியோர் பேச்சுகளில் விளிச்சொற்கள் இடம்பெற்றுச் செய்திப் பரிமாற்றம் நிகழ்த்துகின்ற உத்திகளாக அமைகின்றன.

**அடிக்குறிப்புகள் :**

1. தொல். பொருள். நூற், 656, (இளம். உரை)
2. தொல். எழுத்து, நூற்,65.
3. தொல். சொல்,நூற், 402.
4. தொல். சொல். நூற். 402 (உரை)
5. தொல். மரபு. நூற் : 100, 112 ; நன் . எழுத்து. 14, 15
6. வை. பழனிச்சாமி, செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் பேரகர முதலி, முதன்மண்டலம் - மூன்றாம்பாகம், (உ – ஔ), ப.49
7. அகம் . 129 : 18
8. கலி . 17 : 4
9. கலி . 33 : 28
10. கலி . 40 : 8 – 9
11. கலி . 131 : 12 – 13
12. அகம் . 171 : 5
13. அகம் . 173 : 8
14. அகம் . 313 : 10
15. கலி . 27 : 22
16. கலி . 35 : 8
17. அகம் . 392 : 11
18. அகம் . 380 : 13
19. அகம் . 150 : 14
20. கலி . 4 : 25
21. கலி . 6 : 8
22. கலி . 12 : 10
23. கலி . 44 : 7; 45 : 7
24. கலி . 46 : 9
25. கலி . 72 : 5
26. கலி . 125 : 5
27. கலி . 132 : 7
28. கலி . 19 : 6 – 7
29. அகம் . 68 : 1, 4, 7
30. அகம் . 158 : 7
31. ஐங் . 33 : 1, 113 : 1, 331 : 1, 335 : 1
32. அகம் . 352 : 11
33. கலி . 16 : 9, 13
34. கலி . 29 : 10, 19
35. கலி . 31 : 12
36. கலி . 35 : 20
37. கலி . 41 : 4
38. கலி . 87 : 5
39. கலி . 87 : 5
40. கலி . 93 : 2
41. கலி . 96 : 1
42. கலி . 95 : 32
43. கலி . 96 : 22
44. கலி . 66 : 8
45. கலி . 85 : 21; 86 : 11
46. கலி . 86 : 10
47. கலி . 84 : 20
48. நற் . 192 : 7
49. நற் . 204 : 3
50. நற் . 370 : 1
51. அகம் . 29 : 14
52. அகம் . 75 : 20
53. கலி . 13 :18
54. கலி . 20 : 11
55. கலி . 92 : 1
56. நற் . 370 : 1
57. குறுந் . 250 : 4
58. ஐங் . 481 : 3
59. ஐங் . 485 : 3
60. ஐங் . 487 : 3
61. அகம் . 344 : 11
62. புறம் . 3 : 5
63. புறம் . 3 : 6
64. புறம் . 3 : 16